පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

பேராதனைப் பல்கலைக்கழகம்

**UNIVERSITY OF PERADENIYA**

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

தொடர் தொலைக் கல்வி நிலையம்

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**இரண்டாம் வருட (200 LEVEL) கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி - புதிய பாடத்திட்டம்) - 2020**

**2nd YEAR (200 LEVEL) EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL - NEW SYLLABUS) - 2020**

# ECNE 201: MICROECONOMICS

**அறிவுறுத்தல்கள்:**

1. இவ்வினாத்தாளில் மொத்தம் எட்டு (08) வினாக்கள் உள்ளன. ஏதாவது ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
2. நேரம்: மூன்று (03) மணித்தியாலயங்கள்.
3. கணிப்பான்கள் அனுமதிக்கப்படுகின்றன.
4. மொத்தப் புள்ளிகள்: 100

---

1. a. நுகர்வோர் பயன் கோட்பாட்டில் எண்மானப்பயன் அணுகுமுறையினையும் வரிசைசார் பயன் அணுகுமுறையினையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக. (08 புள்ளிகள்)

   b. குறைந்து செல்லும் எல்லைப்பயன் விதிக்கும் கேள்வி விதிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (06 புள்ளிகள்)

   c. சாதாரண பண்டத்தின் விலைமாற்றத்தின் வருமான மற்றும் பதிலீட்டு விளைவுகளை வரைபினைப் பயன்படுத்தி விளக்குக. (06 புள்ளிகள்)

2. a. விலைக் கட்டுப்பாடுகளை (உச்ச விலை மற்றும் இழிவு விலை) விதிப்பதன் நோக்கங்கள் மற்றும் விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

   b. மேற்படி விலைக்கட்டுப்பாடுகள் எச்சூழ்நிலைகளில் வினைத்திறனற்றதாக வர ஆரம்பிக்கின்றது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

   c. நேரடி மற்றும் மறைமுக மானியங்கள் யாவை? (02 புள்ளிகள்)

   d. சமப்பயன் வளையியினைப் பயன்படுத்தி நேரடி மற்றும் மறைமுக மானியங்களின் நலவிளைவுகளைக் காட்டுக. சமூகநல நோக்கில் இவ்விரண்டு மானியங்களிலும் எது விரும்பப்படக்கூடியது? விளக்குக. (08 புள்ளிகள்)

3. மாதாந்த வருமானமாக ரூபா 21.00 இனைக் கொண்டிருக்கும் ஒரு நுகர்வோன் X, Y ஆகிய இரு பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புகின்றான். X இனதும் Y யினதும் மொத்தப்பயன் சார்புகள் முறையே பின்வரும் சமன்பாடு களால் தரப்பட்டுள்ளன.

$$TU_x = 46X - X^2$$
$$TU_y = 20Y - Y^2$$

X பொருளின் விலை $(P_x)$ ரூபா 5.00 எனவும் Y பொருளின் விலை $(P_y)$ ரூபா 1.00 எனவும் கருதிக் கொள்க.

a. X, Y ஆகிய இரு பண்டங்களினதும் சமனிலைக் கொள்வனவுத் தொகைகளைக் கணிப்பிடுக. (06 புள்ளிகள்)

b. சமனிலையில் Y பண்டத்திற்கான X இன் எல்லைப் பதிலீட்டுவீதத்தின் ($MRS_{xy}$) பெறுமதியைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

c. சமனிலையில் பணத்தின் எல்லைப்பயனைக் ($MU_m$) கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

d. ஏனையவை மாறாத நிலையில் இந்நுகர்வோனின் வாராந்த வருமானம் ரூபா 47.00 ஆக அதிகரிக்கின்றது எனக்கருதுக. இந்நுகர்வோனின் X, Y ஆகிய இரு பண்டங்களினதும் புதிய சமனிலைக் கொள்வனவுத் தொகைகள் என்னவாக இருக்கும்? (06 புள்ளிகள்)

4. X என்னும் பண்டத்திற்கான உற்பத்திச்சார்பு $Q_x = 100L^{0.6}K^{0.4}$ எனத் தரப்பட்டுள்ளது.
இங்கு $Q_x$: X இனது மொத்த வெளியீட்டினையும், L: வேலைக்கமர்த்தப்படும் ஊழியத்தின் எண்ணிக்கையினையும், K: வாடகைக்கு அமர்த்தப்பட்ட மொத்த முதலின் அளவினையும் குறித்து நிற்கின்றன.

a. மேலுள்ள உற்பத்திச் சார்பினைப் பயன்படுத்தி ஒவ்வொரு உள்ளீட்டினதும் சராசரி ($AP_L$, $AP_K$) மற்றும் எல்லை உற்பத்திச் ($MP_L$, $MP_K$) சமன்பாடுகளைத் தருவிக்குக (06 புள்ளிகள்)

b. எல்லை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம் ($MRTS_{LK}$) என்பதனை வரைறுக்குக. சம உற்பத்திக் கோட்டின் வழியே ஏன் இது குறைவடைந்து செல்கின்றது? (06 புள்ளிகள்)

c. மேலுள்ள உற்பத்திச் சார்பினைப் பயன்படுத்தி எல்லை தொழில்நுட்ப பதிலீட்டு வீதத்தினைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

d. குறுங்காலத்தில் ஒரு நிறுவனத்தின் உற்பத்தியின் வேறுபட்ட நிலைகளை (different stages) வரைபடரீதியாகக் காட்டுக. ஒவ்வொரு நிலைகளினதும் அடிப்படைப் பண்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

5. a. பராம்பரிய மற்றும் நவீன செலவுக் கோட்பாடுகளின் கீழ் ஒரு நிறுவனத்தினுடைய நீண்டகாலச் சராசரிச் செலவுக்கும் (LAC) நீண்டகால எல்லைச் செலவுக்கும் (LMC) இடையிலான வேறுபாட்டினை விளக்குக. (10 புள்ளிகள்)

b. ஒரு நிறுவனத்தினுடைய குறுங்கால மொத்தச் செலவுச்சார்பு $TC = 600 + 50q + 6q^2$ ஆகவும் எல்லைச் செலவுச்சார்பு $MC = 50 + 12q$ ஆகவும் உள்ளது.

i. எந்த வெளியீட்டு மட்டத்தில் இதன் குறுங்கால சராசரி மொத்தச் செலவு இழிவுபடுத்தப்படும்? (03 புள்ளிகள்)

ii. எந்த வெளியீட்டு மட்டத்தில் இதன் குறுங்கால சராசரி மாறும் செலவு இழிவுபடுத்தப்படும்? (03 புள்ளிகள்)

c. நவீன செலவுக்கோட்பாட்டின் கீழ் ஒதுக்கப்படும் இயலளவு எவ்வாறு குறுங்கால சராசரிச்செலவு மற்றும் எல்லைச்செலவு வளையிகளின் வடிவத்தினை மாற்றுகின்றது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

6. a. ஒரு நிறைபோட்டிச் சந்தையின் அடிப்படைப் பண்புகள் யாவை? (06 புள்ளிகள்)

b. நிறைபோட்டி சந்தையிலுள்ள சில நிறுவனங்கள் குறுங்காலத்தில் நேர்க் கணிய பொருளாதார இலாபங்களை உழைத்தால் நீண்டகால சமனிலைக்கு என்ன நிகழும் என்பதை விளக்குக. (08 புள்ளிகள்)

c ஒரு நிறைபோட்டி நிறுவனம் அதன் வெளியீடுகளுக்கு (Q) ரூபா 60 இனை சந்தை விலையாக எதிர்கொள்வதுடன் அதனுடைய மொத்தச் செலவு

$TC = 100 + 60Q - 12Q^2 + Q^3$ ஆகவும் உள்ளன.

i. நிறுவனத்தின் எல்லைவருமானச் சார்பு மற்றும் எல்லைச்செலவுச் சார்புகளைத் தருவிக்குக. (02 புள்ளிகள்)

ii. இலாப உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டத்தினையும் உச்ச இலாபத்தினையும் காண்க. (04 புள்ளிகள்)

7. a. ஒரு தனியுரிமை நிறுவனத்தினுடைய பின்வரும் கேள்வி மற்றும் செலவுச் சார்புகளைக் கவனத்தில் கொள்க (விலைபேதப்படுத்தலுக்கு முன்னர்).

$Q = 100 - 0.5P, \quad TC = 100 + 40Q$

i. இலாப உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டத்தினையும் விலையினையும் காண்க. (03 புள்ளிகள்)

ii. சமனிலையில் இலாபத்தினைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

b. தற்போது தனியுரிமை நிறுவனம் அதன் உற்பத்திகளை இரு வேறுபட்ட சந்தைகளில் வெவ்வேறு விலைகளில் (விலை பேதப்படுத்தல்) விற்பனை செய்வதுடன் ஒவ்வொரு சந்தைக்குமான கேள்விச்சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளதாகக் கருதுக.

சந்தை 1: $Q_1 = 60 - 0.4P_1$

சந்தை 2: $Q_2 = 40 - 0.1P_2$

i. ஒவ்வொரு சந்தையினதும் இலாப உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டத்தினையும் விலையினையும் காண்க. (06 புள்ளிகள்)

ii. சமனிலையில் தனியுரிமை நிறுவனத்தின் இலாபத்தினைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

c. பகுதி (a) மற்றும் (b) யிலுள்ள நிலமைகளை ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

8. a. தனியுரிமைபோட்டி நிறுவனத்தின் பிரதான பண்புகள் யாவை? (04 புள்ளிகள்)

b. தனியுரிமை போட்டியிலுள்ள "தனியுரிமை" மற்றும் "நிறைபோட்டி" யின் மூலங்கள் யாவை? 04 புள்ளிகள்)

c. உற்பத்தி வேறாக்கத்துடனான புதிய நிறுவனத்தின் உள்வருகை எவ்வாறு ஒரு தனியுரிமைபோட்டி நிறுவனத்தின் குறுங்காலச் சமனிலையை பாதிக்கும். விளக்குக. (06 புள்ளிகள்)

d. தனியுரிமை போட்டியினுடைய கேள்விக்கோட்டினையும் நிறைபோட்டியினது கேள்விக் கோட்டினையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.. (06 புள்ளிகள்)

*****************************************************************************************